1972 சனவரி 31]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதற்காக முடிவு எடுப்பதற்காகத் தான் மத்திய அரசுடன் கடிதப்போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிருேம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கல்பாக்கத்தில் மின்சார உற்பத்தி எப்போது துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 1975-ல் முதல் கட்ட வேலை முடியும். செகண்ட் யூனிட் 76-ல் முடியும் என்று குறிப்பு இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்தக் கல்பாக்கம் அணு மின்சக்தி தொழிற்சாலை தன்னுடைய பணியைத் துவக்குவதன் மூலமாக சில பேர்களுக்கு, சுமார் 100 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, எற்கெனவே காலதாமதமாகி இருக்கிற காரணத்தால், அதை விரைவாக துவக்க—இந்த வேலைவாய்ப்பு நிலைமையை எண்ணிப் பார்த்தாவது —அரசாங்கம் முன் வருமா? அதிலே தலைமை அணு மின் சக்தி நிலையம் என்ன எற்பாடு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? எனென்ருல் பாம்பே நிறுவனத்தினர் இதற்கான காரணம் தங்களால் இல்லை என்று சொல்லியிருக்கிறபோது, இது தாமதப் படுவதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தாமதம் என்பது அல்ல. அது முடிய திட்டமிட்டதற்கு மேல் ஒரு ஆண்டு ஆகும் என்று சொல்கிருர்கள். இப்போது வேலை நடந்து வருகிறது.

விவசாய பாசனத்திற்கு மின் விசை

* 204 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை ஜில்லாவில் விவசாய பாசனத்திற்கு மின்விசை கொடுப்ப தற்கு காலதாமதம் எற்படுவது உண்மையா?

(இ) காலதாமதமின்றி மின்விசை கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) குறிப்பான நேர்வு எதுவும் அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, திருச்செந்தூர் பகுதியில் இப்போது மின் இணைப்பு கொடுப்பது கொஞ்சமாக இருப்பதால், அதை அதிகரிக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து, உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 60,000 கிணறுகளுக்கு மின்இணைப்பு கொடுப்பது என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அதிலே அந்த வட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக் கிறதோ அவ்வளவுதான் கொடுக்க முடியும்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ஏ. ஆர். சுப்பையா : டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சில் மீட்டிங்கில் கூட இது பற்றி பேசப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தகவல் கொடுத்ததன் பேரில் அதற்கு ஆவன செய்வதாக சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. அரசு அதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அது பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. மொத்தமாக 14,000 விண்ணப்பங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கின்றன. இப்போது இருக்கும் நிதி நிலை பொறுத்தவரை 60,000 பம்பு செட்டுகளுக்குத்தான் இணைப்பு கொடுக்க முடியும். யாருமே கொடுக்க முடியாத அளவுக்கு நாம் இப்போது மின் இணைப்பு கொடுத்து வருகிறோம். இப்போது ரூ. 14 கோடி பம்பு செட்டுக்களுக்காக செலவழித்து வருகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: நெல்லை மாவட்டத்தில் பல இடங்களில் விவசாயிகள் மின் இணைப்பு பெறுவதற்கு மனு போட்டதற்குப் பின்னால் நில விவசாய வங்கிகள் மூலம் பம்பு செட் வாங்க கடன் பெற்று, 3, 4 ஆண்டுகள் சென்ற பிறகு கூட அவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் அல்லல்படுகிறார்கள். ஆகவே, இனிமேலாகிலும் மின்சார இணைப்பு துரிதமாக வழங்க அரசு முன் வருமா? மனு போட்ட 6 மாதத்திற்குள்ளாகவே மின் இணைப்பு வழங்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, கடனை வாங்கிக் கொண்டு, அதே சமயம் மின் இணைப்பு வேண்டுமென்று சொல்கிறார்கள். இரண்டிற்கும் 'கோ-ஆர்டினேஷன்' இருக்கவேண்டும். 5 லட்சம் விண்ணப்பங்கள் இருக்கின்றன. 5 லட்சத்திற்கும் உடனடியாக மின் இணைப்பு ஒரு ஆண்டில் கொடுத்து விட முடியாது. எவ்வளவு விரைவாக திட்டம் செய்தாலும் முடியாது. ரிட்டர்ன் 10 சதவிகிதம் தரவேண்டும். 60,000-க்கு மேல் யாருமே கொடுக்க முடியாது. மேற்கொண்டு இதை அதிகரிக்கலாமா என்றும் யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஆறுமுகம் : மின்சாரம் தருவதற்கு தடையில்லாச்சான்று வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இந்தத் தடையில்லாச் சான்று பெறுவதற்கு விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்தத் தடையில்லாச் சான்று வேண்டாம் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படி உத்தேசம் இல்லை.

லாரி, பஸ் போக்குவரத்து

* 58 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரவு 2 மணி முதல் காலை 4 மணி வரை லாரி, பஸ்கள் சாலைகளில் செல்லுவதை தடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், கார்களுக்கும் இத்தடை பொருந்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தற்போது இல்லை.

(இ) வினுவிற்கிடமில்லை.